06.08.2024

O.S.No. 154/2013

**பி**.வா.சா.2.திரு.குருசாமி த.பெ.கூலு

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதி நான் கூறியதன் பேரில் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தெரியாது. எனக்கு எழுத படிக்கத் தெரியாது, கையெழுத்து போடுவேன். நான் முந்தைய 2 வாய்தாக்களில் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் கூறியவாறு நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து கிழமேல் மற்றும் தென்வடல் எத்தனை அடி எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்டுள்ளது என்று ஆவணங்களை பார்த்து நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான் கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் சுமார் 4 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும்.

2. (இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த வாதியாகிய திரு.எஸ்.பி.செல்லம் என்பவரை காட்டி அவரை பார்த்துள்ளேனா என்று பி.வா.சா.**2-**டம் வழக்கறிஞர் கேட்ட போது அவரை நான் பார்த்ததில்லை என்று சாட்சி கூறுகிறார்). எனது நிருபண வாக்குமூலத்தில் வாதி செல்லம் எந்த காலத்திலும் விவசாயம் செய்தது கிடையாது என்று நான் கூறியுள்ளதால் வாதியை எனக்கு தெரியாது என்று இதே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளதால் நான் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதி பொய்யானது என்றால் சரியல்ல. நான், பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.